உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.303/2021

பெயர் : யோபு(அ.சா.2)

தகப்பனார் பெயர் :பாலகிருஷ்ணன்

கணவர் பெயர் :

வயது :60

கிராமம் :தண்டையார் பேட்டை

வட்டம் :சென்னை

தொழில் :தற்போது நான் ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பாக MKA டிரான்ஸ்போர்ட் மேலாளராக பணியாற்றினேன்.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

20.12.2024

முதல் விசாரணை:

தற்போது நான் ஓய்வு பெற்றுவிட்டேன். இதற்கு முன்பாக MKA டிரான்ஸ்போர்ட் மேலாளராக பணியாற்றினேன். அ.சா.1 வெங்கடேசன் எங்கள் நிறுவனத்தில் ஓட்டுநராக பணியாற்றினார். கடந்த 28.04.2019அன்று நள்ளிரவு 1.00 மணியளவில் அ.சா.1 வெங்கடேசன் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மேலூர் அருகே டீ சாப்பிடுவதற்காக வண்டியை நிறுத்திவிட்டு டீ குடித்துவிட்டு வரும்போது லாரியில் உள்ள தார்பாய் கிழிந்த நிலையில் இருந்தது என்றும்,அதில் உள்ள எண்ணெய் டப்பாக்கள் திருடு போய்விட்டதாக தெரிவித்தார். நான் உடனே காவல்நிலையத்தில் புகார் அளிக்கும்படி கூறினேன். நான் மேலூருக்கு வரவில்லை. என்னை தொலைபேசி மூலமாகவே காவலர்கள் விசாரணை

செய்தார்கள். சுமார் 65 பெட்டிகள் எண்ணெய் திருடு போய்விட்டதாக கூறினார். அ.சா.1 சென்னை மேடவாக்கத்தில் இருந்து மதுரைக்கு லோடு ஏற்றி வந்தார். சுமார் 60000ரூபாய் மதிப்புள்ள பெட்டிகள் திருடுபோய்விட்டதாக கூறினார்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையாகவில்லை என்பதால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.12.20 20:44:29 +0530

Assistant Sessions Judge
Melur